**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையால் பெறப்பட்டுள்ள உலக வர்த்தக மையத்தின் கடைகளை வாடகைக்கு எடுத்தவர்களிடமிருந்து கடந்த ஆண்டிற்குரிய பெற வேண்டிய ரூபா 8,922,419 ஆன வாடகை முன்னைய ஆண்டின் வருமானமாக இனங்காணப் பட்டிராமையை சீராக்கம் செய்யப்படுகையில் இலங்கை கணக்கீட்டு | நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த 03 கடைக்காரர் களிடமிருந்து பெற வேண்டிய மீதிகள் ஐந்தொகைத் திகதியில் துல்லியமாகக் கணக்கிடுவதில் உள்ள சிரமம் காரணமாக, 2023 ஆம் ஆண்டில் அவை இனங்காணப்பட்டிராததுடன் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை கணக்கீட்டு நியம இல. 8 இன் | பெற வேண்டிய வருமானத்தை துல்லியமாக இனங்கண்டு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமம் 08 இன் 42 ஆம் பந்திக்கு இணங்க பின்னோக்குச் சீராக்கம் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் வருமான மாக கணக்கிட்டமையால், மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டிருந்தது. | பிரகாரம் கணக்கீட்டுத் தவறுகளைத் திருத்துவதற்காக நடப்பாண்டுகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| (ஆ) | அதிகாரசபையால் நிர்மாணிக் கப்பட்ட இரத்தினக்கல் கோபுரக் கட்டிடத்தில் கடைகளை வாடகைக்கு வழங்கப்படுகையில் 14 கடைகளுக்கு உரித்தாக அறவிடப்பட்ட ரூபா 84,565,500 தொகையான ஆரம்ப ஏலப் பெறுமதியை இலங்கை கணக்கீட்டு நியம இல. 08 இன் படி அதன் பொருளாதார நலன் பெறப்படும் காலம் முழுவதும் விநியோகிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு இனங்காணப்படாது மீளாய்வாண்டின் வருமானமாக அங்கீகரிக்கப் பட்டிருந்தமையால் ரூபா 82,655,755 ஆல் ஆண்டின் வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 14 கடைகளுக்காக ஒரே தடவையில் அறவிடப்பட்ட ஏலப் பெறுமதியான ரூபா 84,565,500 ஒப்பந்தத்தின் படி ஒரே தடவையில் அறவிடப்பட்ட திரும்பச் செலுத்தப்படாத ஏல வருமானமானதுடன் ஒப்பந்தத் தின் படி மாதாந்த வாடகை வருமானம் அறவிடப்படுவ தாலும், இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் கீழ் கணக்கிடப்பட்டமையாலும், காலப்பகுதிக்குரிய வருமான மாக இனங்காணப் பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி ஆண்டின் வருமானத்தையும், எதிர்காலத்தில் பெறும் வருமானத்தையும் இனங்கண்டு கணக்கிடல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 51 மற்றும் 79 ஆம் பந்திகளின் படி, முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட தொடர்ந்து பயன்படுத்தப்படும் ரூபா 127,000,741 கிரயமான சொத்துக்களின் மொத்தக் கொள்முதல் பெறுமதியை இனங்கண்டு கணக்குகளில் அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட (Revalue) நடைமுறையல்லாத சொத்துக்களை இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79(அ) இன் கீழ் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம், முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட எனினும் தொடர்ந்து பயன்படுத்தப்படும் சொத்துக்களின் மொத்தக் கொள்முதல் பெறுமதியை இனங்கண்டு கணக்குகளில் அவசியமான சீராக்கங்களை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 37 இன் 14 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணிகள் பூர்த்தி செய்யப்படாத போதிலும், அதிகாரசபைக்கு எதிராக வெளித் தரப்பினரால் தொடரப்பட்ட 05 வழக்குகளுக்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 7,700,000 நட்டஈட்டுத் தொகையாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் இந்த மதிப்பீட்டுத் தவறைச் சீராக்கத் தவறியதன் காரணமாக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தக்க வைக்கப்பட்ட இலாபம் ரூபா 7,700,000 இனால் குறைவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகாரசபைக்கு எதிராக வெளித் தரப்பினரால் தொடரப்பட்ட 06 வழக்குகளுக்குரிய, செலுத்த வேண்டி வரலாம் என எதிர்பார்க்கப்படும் நட்டஈட்டுத் தொகையான ரூபா 1,029,764,412 நிலுவையில் இருப்பதாக அதிகாரசபையின் சட்ட அதிகாரி உறுதிப்படுத்தியிருந்த போதிலும், தரத்தின் 28 ஆம் பந்திக்கு அமைய அந்தத் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்பட்டிருக்கவில்லை. | முடிவுக்கு வராத 5 வழக்குகளுக்காக நட்டஈடு செலுத்தும் அபாயம் நிலவுவதாக அதிகாரசபையின் சட்டப் பிரிவினால் பெறப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்தின்படி, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கடந்தகாலச் செயற்பாட்டின் விளைவாகச் செலுத்துவதற்கான தற்போதைய பொறுப்பு நிலவுவதைப் பின்னணியாகக் கொண்டு, இலங்கை கணக்கீட்டு நியம இல 37 இற்கு அமைய ரூபா 7,700,000 இற்குரிய திரட்டப்பட்ட செலவுகளுக்கான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல 37 இன் கீழ் நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கணக்கீட்டு நியம இல 37 இற்கு இணங்க, ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிகழத்தக்க பொறுப்புகளுக்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஏனைய நிகழத்தக்க பொறுப்புகள் இனங்காணப்பட்டு வெளிப்படுத்த வேண்டிய தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பிரதான அலுவலகக் கட்டிடத்திற்கு அருகில் தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள் காரணமாக அதிகாரசபையின் வளாகத்தின் ஒரு பகுதி 2021 ஜூலை 16 ஆம் திகதி நிலச்சரிவுக்கு உள்ளானதால் ஏற்பட்ட ரூபா 100 மில்லியன் நட்டத்தை மதிப்பிட்டு, அதனைப் பூரணப்படுத்து வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக அதிகாரசபையால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இல. 37 இன் 34 ஆம் பந்தியின் படி, நிதிக் கூற்றுக்களில் வெளிப் பட்டிருக்கவில்லை. | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகையில் கடந்தகாலச் செயற்பாட்டின் அடிப்படையில் தற்போதைய பொறுப்பிற்குரிய போதுமான எழுத்து மூலச் சான்றுகள் சட்டப் பிரிவினால் வழங்கப் படாத காரணத்தினால், வெளிப் படுத்தல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இல 37 இற்கு அமைய நிகழத்தக்க பொறுப்புக்களை இனங்கண்டு வெளிப்படுத்த வேண்டிய தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். |
| (ஊ) | இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியம இல. 39 இன் 58 ஆம் பந்தியின் படி ஒவ்வொரு கணக்கீட்டுக் காலப்பகுதியிலும் சொத்துக் கள் குறைப்புக்கு உள்ளாகி யுள்ளனவா என்பதை மதிப்பிட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது ஏனைய சொத்துக்கள், பெறப்பட வேண்டியவை மற்றும் வைப்புக்களும் முற்பணங்களுக்காகக் குறைப்பு இழப்பாக முறையே வருடாந்தம் ரூபா 200,000, ரூபா. 1,407,972 மற்றும் ரூபா 1,433,947 ஐந்து வருடங்களுக்கும் மேலாகக் கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளன. | இச் சொத்துக்களுடன் தொடர்புடைய குறைப்பு இழப்பு, இலங்கை கணக்கீட்டு நியமம், சர்வதேச கணக்கீட்டுத் தரங்களாக மாற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் இனங்காணப்பட்ட போதிலும், அது வருடாந்தம் மதிப்பிடப்படவில்லை. | நியமத்தின் படி ஒவ்வொரு கணக்கீட்டுக் காலப்பகுதியிலும் சொத்துக்கள் குறைப்புக்கு உள்ளாகியுள்ளனவ ா என்பதை மதிப்பிட்டு, அதனை கணக்குகளில் சீராக்க வேண்டும். |
| (எ) | அதிகாரசபையால் ரூபா. 420,285,840 செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரத்தினக் கல் கோபுரக் கட்டிடத்தின் 03 மாடிகளில் இருந்த 27 கடைகள் முப்பது வருடக் குத்தகை அடிப்படையிலலும் உணவகம் வாடகைக்கு | சீராக்கப்படுவதற்காக பணிப்பாளர் (நிதி) அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது | நியம இல. 40 இற்கு அமைய கட்டிடத்தின் பெறுமதி முதலீட்டுச் சொத்தாக அறிக்கையிடப்பட வேண்டும |

| | | |
|---|---|---|
| வழங்குவதற்காக ஒதுக்கப் பட்டிருந்தது. அதற்கமைய, கட்டிடத்தின் பெறுமதி இலங்கை கணக்கீட்டுத் நியம இல. 40 இற்கு அமைய முதலீட்டுச் சொத்தாக அறிக்கைப்படுத்துவதற்குப் பதிலாகச் ஆதன, இயந்திரம் மற்றும் உபகரணத்தின் கீழ் கட்டிடமாகக் காட்டப்பட்டுள்ளன. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானத்தைக் கணக்கிடும் போது ரூபா 3,718,340 ஆக இருந்த வட்டி மீதான தடுத்து வைக்கப்படும் வரியைக் கழித்து வருமானம் இனங்காணப்பட்டுள்ளது. மேலும், நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களுக்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்குரிய வட்டி வருமானம் ரூபா 487,885,070 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 397,810,120 ஆக ரூபா 90,074,950 இனால் குறைவாகவும் அத்துடன் அதனுடன் தொடர்புடைய பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,917,264 இனால் குறைவாகவும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | வங்கியின் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் கணக்கிடப்பட்டமையே இந்த வேறுபாட்டிற்குக் காரணமாகும். எதிர்காலத்தில் நிலுவை உறுதிப்படுத்தல்கள் மற்றும் வட்டி வருமானங்கள், வங்கி அறிக்கை ஆகிய இரண்டின் உரிய திகதிகளையும் கவனத்தில் கொண்டு பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புதுப்பித்தல் அறிவிப்புகள் மற்றும் ஏனைய அட்டவணைகளின் அடிப்படையில் சரியாக வட்டி வருமானத்தை கணக்கிட்டு கணக்கிட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையால் நடப்பாண்டில் நடத்தப்பட்ட கண்காட்சிகளுக்காகச் செலுத்த வேண்டிய செலவுகளைத் துல்லியமாகப் பொறுப்பாக இனங்காணாமல், அந்தச் செலவுகளுக்காக ரூபா 4 மில்லியன் ஒதுக்கப்பட்டு திரண்ட செலவுகளில் | நடத்தப்பட்ட கண்காட்சிகளுக்காகச் செலுத்த வேண்டிய செலவுகளாகத் துல்லியமாக இனங்காண்பதற்கு மூல ஆவணங்கள் இன்மையாலும், கொடுப்பனவுகளைச் செய்யப் பணிப்பாளர் சபையின் அனுமதி இன்மையாலும், நிகழத்தக்க பொறுப்பாகக் | செலவுகளைச் செய்யும் போது பணிப்பாளர் சபையின் உரிய அனுமதியுடன் செய்ய வேண்டும், அத்துடன் அதற்கான மூல ஆவணங்களும் இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்தது. | கருதி ரூபா 4 மில்லியனுக்கு ஒதுக்குதல் செய்யப்பட்டது. | |
| (இ) | மீளாய்வாண்டில் இரத்தின புரியில் நடைபெற்ற சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சிக்காகச் செலவிடப்பட்ட ரூபா 8,042,333 இற்குரிய 04 செலவுப் பட்டியல்கள் மீளாய்வாண்டின் செலவு களிலிருந்து கைவிடப்பட்ட மையால், மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ நிகழ்வு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக பணிகளுக்கான பட்டியல்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கணக்குப் பிரிவுக்குப் பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இந்தச் செலவு திரண்ட செலவாக இனங்காணப்படவில்லை | ஆண்டுக்குரிய அனைத்துச் செலவுகளையும் நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | சுற்றிவளைப்புக்களுக்காக வெகுமதி பெறுபவர் களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 70,922,416 தொகையை நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக, நிதி நிலைமை கூற்றில் உரிமைப் பங்கின் கீழ் இரத்தினக்கல் வெகுமதி நிதியாகக் காட்டப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் பிரதான நிதியில் இருக்கும் நிலுவையாக இருப்பதால், வெகுமதி நிதி ரூபா 70,922,416 நிதிக்கூற்றுக்களில் உரிமைப் பங்காக இனங்காணப்பட்டுள்ளது. திறைசேரியினால் சட்டரீதியான நிதியாக அங்கீகரிக்கப்படும் வரை உரிமைப் பங்காகக் கணக்கிடப்பட்டுள்ளது. | உரிமைப் பங்கின் கீழ் உரிமையாளர்களின் உரிமையைக் காட்டும் பெறுமதிகளை மட்டுமே காண்பித்தல் வேண்டும். எனவே, நிதிக் கூற்றுக்களில் பொறுப்பு களாகக் காண்பிக்கப்பட வேண்டிய விடயங்களை உரிமைப் பங்கின் கீழ் காண்பித்தலாகாது. |
| (உ) | நடப்பாண்டில் ஒக்டோபர் 01 முதல் திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குரிய செலுத்த வேண்டிய VAT தொகையான ரூபா 5,287,497 ஆனது 2025 ஜனவரி 20 ஆம் திகதி செலுத்தப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டின் முடிவில் செலுத்த வேண்டிய VAT பெறுமதியாக ரூபா 1,592,752 காட்டப்பட்டமையால் ரூபா 3,694,745 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி ஆலோசனைக் குழுவினால் 2024 ஜனவரி 17 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளைக்கமைய 2009 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு நிலுவையில் இருந்த ரூபா 3,673,486 ஆன பெறுமதி சேர் வரியைச் செலுத்திய போது VAT பேரேட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட போதிலும், VAT வரி கட்டுப்பாட்டுக் கணக்கில் சம்பந்தப்பட்ட சீராக்கம் செய்யப்படாத காரணத்தினால் மேலே குறிப்பிட்ட ரூபா 3,694,745 வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் VAT வரி செலுத்தும் போது VAT | செலுத்த வேண்டிய VAT சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பேரேட்டுக் கணக்கு சீராக்கப்படும். | |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பத்து சதவீத தடுத்து வைக்கப்படும் வரி, காணிப் பகுதி வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் , பெறப்பட்ட வைப்புக்கள் மற்றும் முன்பணங்கள் ஆகிய விடயங்களுக்குரிய முறையே ரூபா 2,568,873, ரூபா 144,099,070, ரூபா 4,555,139 மற்றும் ரூபா 105,842 ஆகிய நிலுவைகளுக்கான அட்டவணைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தடுத்து வைக்கப்படும் வரி கடந்தகால நிலுவையாக இருப்பதாலும், அதற்கான போதுமான தகவல்கள் அதிகாரசபையிடம் இன்மையாலும், 15 வருடங்கள் கடந்தும் அதற்குரிய உரிமை கோரல் எதுவும் இடம்பெறாத காரணத்தினாலும், பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில் எதிர்காலத்தில் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரசபையின் பிரதேச அலுவலகங்கள் தனித்தனியாகப் பேணப்படும் காணிப் பகுதி அறிக்கைகளைப் பரிசோதிப்பதன் மூலம் அந்த நிலுவைகளைப் பெறலாம். உலக வர்த்தக மையத்தின் பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் வாடகை வைப்புக்கள் தொடர்பாக வைப்பு அறிக்கை உள்ளது, அது பேரேட்டுக் கணக்குடன் ஒப்பிட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆவணங்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளை ஒப்பிட்டுச் சரியான பெறுமதிகளுடன் கணக்குகளைப் பேண வேண்டும், அத்துடன் அந்த அட்டவணைகளைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகளுக்குக் கடைகளை வழங்குவதற்காக அதிகாரசபைக்கும் உலக வர்த்தக மைய நிறுவனத்திற்கும் இடையில் இருந்த குத்தகை ஒப்பந்தம் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதிலும், அதிகாரசபை யால் 2004 - 2018 காலப் பகுதியில் நிறுவனத்திற்கு அவ்வப்போது செலுத்தப்பட்ட ரூபா 4,314,837 இற்குரிய பாதுகாப்பு பிணை வைப்பு மீள அறவிடப்படவில்லை. | பாதுகாப்பு வைப்பைக் குறைத்துள்ள கடை உரிமையாளர்களிடமிருந்து வாடகை பெறுமதியை மீள அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். | பாதுகாப்பு வைப்பு நிலுவைகளை உடனடியாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்வகை கடனாளிகள் நிலுவையான ரூபா 353,379,225 இற்குள் 04 வருடங்களை விஞ்சிய ரூபா 186,760,140 மீதியும், பத்து சதவீத தடுத்து வைத்தலில் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த ரூபா 2,568,872 மீதியும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. | பல்வகை கடனாளிகள் மீதியில் உள்ள 04 வருடங்களை விஞ்சிய ரூபா 186,760,140 நிலுவையில் காணி ஏலங்களின் மூலம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் செலுத்த வேண்டிய பணம் உள்ளது. இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுவதால், அதன் தீர்ப்பு கிடைக்கும் வரை கடனாளிகள் நிலுவையில் காட்டப்பட்டுள்ளது. தீர்க்கப்படாமல் உள்ள பத்து சதவீத தடுத்து வைத்தல் நிலுவை ரூபா 2,568,872 தொடர்பாகப் பணிப்பாளர் சபையின் முடிவின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய நிலுவைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறப்பட்ட வைப்புக்கள் மற்றும் முன்பணங்களில் உள்ள திறைசேரி வைப்புக்களின் கீழ் உள்ள ரூபா 11,168,580 பெறுமதியில், வைப்புக்கள் பற்றிய தகவல்கள் துல்லியமாகப் பதிவு செய்யப்படாத 10 வருடங்களுக்கு மேலான மொத்தம் ரூபா 1,842,675 பெறுமதியான 130 வைப்புக்கள் காணப்பட்டன. | 2008 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ள உரிமை கோரப்படாத திறைசேரி வைப்புக்கள் இதில் அடங்கும், மேலும் தகவல்கள் போதியளவு இல்லாத காரணத்தினால் இந்த வைப்புக்களை இதுவரை விடுவிக்க முடியவில்லை. | செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளை ஆராய்ந்து உடனடியாகத் தீர்க்க வேண்டும் அல்லது தகவல்கள் இல்லாத மீதிகளை வருமானமாக எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டம் | | | |
| (i) | 14(1) ஊ பிரிவு | சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்தல், சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து இரத்தினக்கற்களை வெளியேற்றுதல் ஆகியவற்றைத் | இந்தத் தொழில் இலங்கையில் நிறுவப்பட்டுள்ளதன் தன்மைப்படி, அனுமதியற்ற அகழ்தல்/சுரங்கம் அகழ்தல் தொடர்ந்து | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்தலைத் தடுப்பதற்கு நடவடிக்கை |

தடுப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அதிகாரசபையின் மொனராகலை பிரதேச அலுவலகத்தால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 38 சுற்றி வளைப்புக்களின் போது அனுமதிப் பத்திரங்கள் பெறப்படாது டிப்பர் வாகனங்களைப் பயன்படுத்தி இரத்தினக்கல் மண் கொண்டு செல்லப்பட்டமை, அனுமதியின்றி அரச காணிகளில் சுரங்க அகழ்வு மற்றும் ஆற்றுப் பாதுகாப்புப் பகுதிக்கு சேதம் விளைவிக்கும் வகையில் சுரங்க அகழ்வு என்பன இடம்பெற்றிருந்தன. மேலும், 46 சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மீறப்பட்டிருந்த போதிலும், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் மற்றும் அபாயகரமான சட்டவிரோத சுரங்கம் அகழ்வு மற்றும் இரத்தினக்கல் அகழ்வு என்பவற்றைத் தடுப்பதற்கு தண்டப்பணம் அறவிடுதலைத் தவிர வேறு சட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

இடம்பெறுகிறது, அதனை முழுமையாக நிறுத்துவது கடினமாகும். எவ்வாறாயினும், இவ்வாறான குற்றவாளிகளுக்கு அதிகாரசபைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள சமாதானப்படுத்தும் அதிகாரத்தின் படி நடவடிக்கை எடுப்பதே பின்பற்றப்படும் பொதுவான கடமைச் செயற்பாடாகும்.

எடுத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 15(1) ஆம் பிரிவு | இரத்தினக்கல் தொழில் விடயத்திற்குப் பிரதான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை மூன்றாம் தரப்பினருடன் நேரடியாக இரத்தினக்கல் அகழும் திட்டங்களில் ஈடுபடுவது சட்டத்தின் 15(1) அத்தியாயத்திற்கு முரணானது என 2019 மார்ச் 25 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட போதிலும், இரத்தினக்கல் அகழும் திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இரத்தினக்கல் தொழில் தொடர்பாக மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்வது, அதாவது இரத்தினக்கல் அகழும் திட்டங்களில் ஈடுபடுவது தொடர்பாகச் சட்டமா அதிபர் திணைக்களத் தினால் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. 2024 பெப்ரவரி திகதி யிடப்பட்ட சட்டமா அதிபரின் ஆலோசனை யின் படி, அதிகாரசபை நேரடியாக இரத்தினக்கல் அகழும் செயற்பாட்டில் ஈடுபடவில்லையெனில், பெறப்படும் இரத்தினக் கற்களில் அரசின் பங்கை அறவிடுவது தொடர்பாக மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்வதற்குத் தடையில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக CA(Writ)694/2023 இலக்கத்தின் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது, மேலும் மேற்கண்ட சட்ட ஆலோசனையை நீக்குமாறும் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தற்போது ஏலத்திற்கு வெளியில் இரத்தினக்கல் அகழும் உரிமை வழங்கப்படுவ தில்லை, மேலும் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களும் முடிவுக்கு வந்துள்ளன. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இரத்தினக்கல் அகழும் திட்டங்களைச் செயற்படுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 15(2) ஆம் பிரிவு | இரத்தினக்கல் பரிசோதனை மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்காகப் பேணப்படும் தனியார் ஆய்வகங்களைப் பதிவு செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் பொறிமுறைகள் தயாரிக்கப்படவில்லை. | தனியார் ஆய்வகங்களை வகைப்படுத்துவதற்கான அளவுகோல்கள் 2025 மே 30 ஆம் திகதி சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த வகைப்படுத்தல் அளவுகோல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் பிரிவுகளின் தலைவர்களின் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு இறுதி வரைவைத் துரிதமாகச் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இரத்தினக்கல் பரிசோதனை மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்காகப் பேணப்படும் தனியார் ஆய்வகங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 20(1) ஆம் பிரிவு | அதிகாரசபைக்குக் கிடைக்கும் அனைத்துப் பணமும் நன்கொடைகளும் அதிகாரசபையின் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டும் என்றும், பரிசளிப்புப் பணத்தை அந்த நிதியைப் பயன்படுத்திச் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இல்லம் ஏல விற்பனையிலிருந்து கிடைக்கும் பணம் மற்றும் அதிகாரசபையால் விதிக்கப்பட்ட அபராதப் பணத்தை செலவு வைப்பதற்காக பரிசளிப்பு நிதி என்ற ஒரு நிதியமும், இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் ஈடுபடுவோரின் உயிர் மற்றும் உடல் உறுப்புகள் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதி என்ற ஒரு நிதியமும், ஆபரண உற்பத்தியாளர்களின் | அதிகாரசபையால் பேணப்படும் பரிசளிப்புப் பணத்தைச் செலுத்துவதற்கான ஒதுக்கீடு மற்றும் சுரங்கத் தொழிலாளர்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடு என்பன நிதியங்கள் அல்ல என்பதால், அதற்கு திறைசேரியின் அனுமதி பெறப்படவில்லை. ஆபரண அபிவிருத்தி நிதி, 2006 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின்படி திறைசேரியின் அனுமதியின் கீழ் பேணப்பட்டு வருகிறது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கிடைக்கும் பணம் அதிகாரசபையின் நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். நிதியங்கள் பேணப்படுமாயின், திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொழில்நுட்ப வளர்ச்சிக் காக ஆபரண அபிவிருத்தி நிதி என்ற ஒரு நிதியமும் என 03 நிதியங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருந்தன. பிரதான நிதியத்துக்கு மேலதிக மாக ஒரு நிதியம் பேணப்படுமாயின், அது திறைசேரியின் அனுமதியுடன் பேணப்பட வேண்எய போதிலும் அத்தகைய அனுமதி யின்றி 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பரிசளிப்பு நிதியில் ரூபா 70,922,416 மீதியும், இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியில் ரூபா 40,741,334 மீதியும், ஆபரண அபிவிருத்தி நிதியில் ரூபா 101,455,508 மீதியும் நிலவும் வகையில் இவை பேணப்பட்டு வந்துள்ளன. | | |
| (ஆ) | 2017 இல. 24 உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 86 ஆம் பிரிவும், உள்நாட்டு இறைவரி ஆணையாள ரின் இல. SEC/2022/ E/03 மற்றும் 2022 டிசம்பர் 23 ஆம் திகதிய நிறுத்தி வைத்தல்கள் துணை முகவர்களுக்கு வழங்கப்பட்ட நிறுத்திவைத்த ல் வரி மற்றும் முற்பண வரி குறைப்பு சுற்றறிக்கையி ன் 06 ஆம் பந்தி. | i. | ஒவ்வொரு நிறுத்தி வைத்தல்கள் சேகரித்த முகவர்களுக்கு வழங்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வரி குறைப்பு ஒவ்வொரு நாள்காட்டி மாதமும் முடிவடைந்து 15 நாட்களுக்குள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும். மீளாய்வாண்டிற்காக சேகரிக்கப்பட்ட ரூபா 513,495,637 மற்றும் 2024 வருடத்திற்கு முன்னர் சேகரிக்கப்பட்ட ரூபா 491,428,327 உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2.5 சதவீத நிறுத்தி வைத்தல் வரிக்குரிய ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, பேரேட்டுடன் ஒப்பிட்டு வரவுகள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர், கொடுப்பனவுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறுவனவுகள் உரிய முறையில் உறுதி செய்யப்படுவதற்கு கணக்குப் பிரிவில் ஊழியர் பற்றாக்குறையே காரணமாகியிருந்ததுடன் எதிர்காலத்தில் வரித் தொகை விரைவாகச் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரியின் படி நிறுத்திவைத்தல் வரி அனுப்பிவைக்கப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பான கவனக்குறைவு உள்ளதா என உரிய பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ii ஒவ்வொரு நிறுத்தி வைத்தல் துணை முகவர்களாலும் நிறுத்தி வைத்தல் வரி வருடாந்த கூற்று வரி வருடம் முடிவுற்று ஒரு மாதத்திற்குள் (30 நாட்கள்) அதாவது ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் வரிக்குரிய வருடாந்த அறிக்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் 2025 மே மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | உள்நாட்டு வருமான வரிச் சட்டத்தின் படி, வருடாந்த நிறுத்திவைத்தல் வரி வருமானத்தை வரி ஆண்டு முடிவடைந்த ஒரு மாதத்திற்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய இல. NGJA/ 16.2/2018/Bachoe III ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | இரத்தினக்கல் அகழ்வின் பின்னர் நிலப்பகுதியை வழமையான நிலைக்குக் கொண்டுவர வேண்டியதுடன் அவ்வாறின்றி ஆபத்தான நிலையில் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படத்தக்க வகையில் கைவிடப்பட்டுள்ள ஆபத்தான சுரங்கக் குழிகள், அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டு 02 மாதங்களின் பின்னர் அதிகாரசபையால் மூடப்பட்டு நிலத்தை வழமையான நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இச் சுரங்க வளாகத்தை மறுசீரமைப்பதற்காக அதிகாரசபை வைப்புப் பணமொன்றைப் பெற்றுக்கொண்டிருந்தது. இவ்வாறு பெறப்படும் வைப்புக்களின் மீதி வருடாந்தம் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவ் வைப்புக் கணக்கில் ரூபா 1,760,351,594 தொகையான மீதி நிலவியது. எவ்வாறெனினும், | 10 ஆண்டுகளுக்கும் மேலான சுரங்கங்களைக் கையாள்வது தொடர்பாக NGJA/17.1/COPE/23/24 என்ற கடிதம் மூலம் மூன்று அதிகாரிகள் குழுவால் கள ஆய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அறிக்கையின் படி, இந்தப் பகுதியில் பல ஆண்டுகளாக வளர்ந்த இயற்கை சுற்றுச்சூழல் அமைப்பு இருப்பதால், முறையான சுற்றுச்சூழல் மதிப்பீட்டை நடத்தி அந்த சுற்றுச்சூழல் அமைப்பை அதே வழியில் பாதுகாப்பது அல்லது குழிகளை மூடுவது அல்லது பிற பயனுள்ள நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது ஏற்றது என சுற்றறிக்கையின் படி, இரத்தினச் சுரங்கங்கள் மூடப்பட்டு, தொடர்புடைய பகுதிகள் முறையாக மீட்டெடுக்கப்படுவது ஏற்றதென குறித்த | சுற்றறிக்கையின் படி, இரத்தினக்கல் சுரங்கங்கள் மூடப்பட்டு, சம்பந்தப்பட்ட காணிகள் முறையாக மீட்டெடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இரத்தினக்கல் சுரங்கக் குழிகள் மூடப்பட்டு குறித்த நிலப்பகுதி முறையான வகையில் மறுசீரமைக்கப் பட்டுள்ளதா என்பது குறித்து அதிகாரசபை முறையான ஒழுங்கு முறையையோ அல்லது அதிகாரசபையால் சுரங்க நிலப்பகுதி மறுசீரமைப்பதற்காக முறையான திட்டமோ செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. தெரிவுக் கணக்காய்வில் கண்டறியப்பட்டவாறு 16 சுரங்கக் குழிகள் 2025 மே வரை நிரப்பப்படாதிருந்ததுடன் இச் சுரங்கக் குழிகள் 10 வருட காலத்திற்கு முன்னர் இரத்தினக்கல் அகழ்விற்கு மேலதிகமாக பல்வேறு செயற் பாடுகளுக்காக (மணல்/ மண்) அகழ்விற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலமானதுடன் அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொண்ட குறித்த தரப்பினர் தொடர்பான விபரமும் அதிகார சபைக்கு இருக்க வில்லை. | அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 04 ஆம் 05 ஆம் பந்தி | இரத்தினக்கல் ஆபரணங்கள் சந்தைப் பெறுமதி காண்பிக்கப் படும் பதிவேடு ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை முதலாம் வேலை நாளன்று நாளதுவரையாக்கப்பட்டு அதிகார சபையின் இணைய தளத்தில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப் பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக இரத்தினக்கல், ஆபரண இருப்புகளை பரீட்சித்து சந்தைப் பெறுமதியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக | இரத்தினக் கற்களின் சந்தை மதிப்பைக் குறிக்கும் ஆவணம் அதிகாரசபையின் வலைத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அது காலாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படவில்லை. சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பான சுற்றறிக்கை வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட வேண்டும் என்பதால், சுற்றறிக்கையின் பிரிவுகள் 6,7,8,9,10 | சுற்றறிக்கையின் படி சந்தைப் பெறுமதியைக் காண்பிக்கும் ஓர் பதிவேடு வலைத்தளத்தில் வெளியிடப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுற்றறிக்கையின் இல. 6,7,8,9,10 ஆம் பந்தி களில் குறிப்பிடப்பட்ட வாறு விலைப் பட்டியல் பெறுமதி சந்தைப் பெறுமதியைப் பார்க்கிலும் மாறுபட்டிருக் கையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்பட இயலா திருந்தன. | இன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | |
| (iii) | 07(i) ஆம் பந்தி | இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களின் விலைப்பட்டியல் பெறுமதிக்கும் மதிப்பீட்டுப் பெறுமதிக் கும் இடையே 30 சதவீதம் வரையான வேறுபாடு திருத்தப்படாது ஏற்றுமதி செய்யப்படு வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அதிகரிக்கும் விலைப்பட்டியல் பெறுமதிக்கான சேவைக் கட்டண வருமானம், அதிகார சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று. இரத்தினக் கற்களின் உண்மையான விற்பனைப் பெறுமதியைப் பார்க்கிலும் விலைப் பட்டியலில் குறிப்பிடப் பட்ட பெறுமதி மாத்திரம், ஏற்றுமதியால் கிடைக்கப்பெற்ற வருமானமாக அனுப்பிவைக்கும் போக்கு, ஏற்றுமதி யாளர்களிடையே நிலவும் சந்தர்ப்பத்தில், உயர் பெறுமதியான ஏற்றுமதி களின் இன்வொயிஸ் பெறுமதி மேற்குறித்த அங்கீகாரத்தில் மாற்றப் பட்டிராததன் காரணமாக நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படும் அந்நிய செலாவணித் தொகை குறைவடையும் நிலை நிலவியது. | சர்வதேச அளவில் இரத்தினக் கற்களுக்கு நிலையான விலை இன்மையால், அண்ணளவாக 70 சதவீத விலை சீராக்கல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு 30 சதவீத ஏற்ற இறக்கம் அனுமதிக்கப் படுகிறது. இருப்பினும், எதிர்காலத்தில் இந்த விடயத்தை மறு பரிசீலனை செய்து சந்தை விலையைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த சதவீதத்தை திருத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த உள்ளக சுற்றறிக்கை புதுப்பிக்கப்பட உள்ளது. உள் சுற்றறிக்கை தேவைக்கேற்ப திருத்தப்பட வேண்டும். | தேவைக்கேற்ப உள் சுற்றறிக்கை திருத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 607,576,727 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 995,430,030 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 387,853,303 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்தக் குறைவுக்கு வருமானம் மற்றும் தேறிய நிதி வருமானம் ஆகியவற்றின் கூட்டல் பெறுமதி ரூபா 443,099,018 இனால் குறைவடைந்தமையும், ஏனைய வருமானங்கள் ரூபா 110,809,088 இனால் அதிகரிப்பதற்குச் சார்பாக, நிருவாகச் செலவுகள், தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் ஊக்குவிப்புச் செலவுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 55,563,372 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டம் 1993 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், அதனை காலத்திற்கேற்பச் திருத்தப்படுவதற்கு மீளாய் வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இல. அமப/23/1392/ 617/029 மற்றும் 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய அமைச்சர வைத் தீர்மானத்தின் படி, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்கச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை என அறிவிக்கப்பட்டிருந்தமையால் மீண்டும் அந்தக் சட்டத்தைத் திருத்துவதற்காக அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. | காலத்திற்கேற்பச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுங்கத்தால் 2022, 2023 மற்றும் 2024 ஆகிய மூன்று ஆண்டுகளின் போது ரூபா 2,091,693,980 பெறுமதி யான இரத்தினக்கல் கிலோ கிராம் 46,815.94 ஏற்றுமதி செய்யப்பட்டிருந்த துடன் இதற்குரிய சமூகப் பாதுகாப்பு வரியாக ரூபா 15,614,849 தொகையும் பெறுமதி சேர் வரியாக ரூபா 38,616,009 தொகையும், 2024 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. இம் மூன்று ஆண்டுகளின் போது ரூபா 22,523,409 பெறுமதியான் 1,664.06 கிலோகிராம் இரத்தினக்கற்களுக்கு மாத்திரம் ரூபா 10,723,623 பெறுமதி சேர்க்கப்பட்டு அதிகாரசபை யூடாக மீள்ஏற்றுமதி செய்யப் பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போதும் இதற்கு முன்னைய ஆண்டின் போதும் மொத்த இரத்தினக்கல் இறக்குமதி | இந்தத் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு அனைத்து இரத்தினக் கற்களின் இறக்குமதி தொடர்பான தகவல்களை அதிகாரசபை பெற வேண்டி யிருப்பதால், இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. | இறக்குமதி செய்யப்பட்ட இரத்தினக் கற்கள் தொடர்பாக இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து ஒரு ஒழுங்குமுறை பொறிமுறையை உருவாக்க வேண்டும், மேலும் மதிப்பு கூட்டப்பட்டு மறு ஏற்றுமதியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தலக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான தகவல்களை அதிகாரசபை கொண்டிராததுடன் இறக்குமதி தொடர்பிலான ஒழுங்கமைப்பு முறையொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இரத்தினக்கல் சூடாக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டறிவதற்காக, மொத்தமாக ரூபா 16,379,110 செலவில் இரண்டு FTIR இயந்திரங்கள் 2013 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டன. இருப்பினும், இந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து 2025 மார்ச் மாதம் வரை 07 சான்றிதழ்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி, உற்பத்தி நிறுவனம் இரண்டு அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயிற்சியை வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட போதிலும், ஐந்து வருடங்கள் கடந்த பின்னரும் இதுவரை அந்தப் பயிற்சி பெறப்படவில்லை. மேலும், இந்த இயந்திரங்களுக்கான சேவை ஒப்பந்தங்களும் செய்யப்பட வில்லை. தற்போது, இயந்திரங்களைச் சரியாக இயக்குவதற்குப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மற்றும் தரவுத் தளங்கள் இல்லாத காரணத்தினால், இயந்திரங்கள் அவற்றின் அதிகபட்ச செயல் திறனுடன் இயங்கவில்லை. | கொழும்பு பிரதான அலுவலகத்திற்கும் இரத்தினபுரி இரத்தினக்கல் ஆய்வகத்திற்கும் முறையே 2020 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு FTIR இயந்திரங்களும் தற்போது செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இருப்பினும், கொழும்பு பிரதான அலுவலகத்தில் உள்ள FTIR இயந்திரத்திற்கான பொருத்தமான தரவுத் தளம் (Data base) போதாமையினாலும் போதிய பயிற்சி இன்மையினாலும் தற்போது சான்றிதழ்கள் வழங்குவது மேற்கொள்ளப்பட வில்லை. இரத்தினபுரியில் நிறுவப் பட்டுள்ள FTIR இயந்திரத்தை இயக்கு வதற்கு அதன் பணியாளர்களுக்குத் தேவை யான பயிற்சியை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனம் வழங்குகிறது, அது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்கள் உரிய செயற்பாட்டு நிலையில் பராமரிக்கப்பட்டு, செயல்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | அதிகாரத்தின் வசமுள்ள மதிப்புமிக்க உலோகங்களை ஆய்வு செய்வதற்கும் முத்திரையிடுவதற்கும் பயன் படுத்தப்படும் 06 லேசர் குறியிடும் (Laser Marking) இயந்திரங்களும் 2024 மார்ச் 15 ஆம் திகதி செயலிழந்த காரணத்தினால், அன்றிலிருந்து கைமுறையாக (Manual Hallmarking) | 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு SISMA EASY 100 உபகரணம் 2018 ஆம் ஆண்டிலும், மற்றொன்று 2022 அக்டோபர் 28 ஆம் திகதியும் செயலிழந்தன. 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு 200F உபகரணங்கள் 2023 ஆம் | சொத்துக்கள் உரிய செயற்பாட்டு நிலையில் பராமரிக்கப்பட்டு, செயல்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |

முத்திரையிடுதல் மாத்திரமே நடைபெறுகிறது. கணக்காய்வுத் திகதியான 2025 மே 28 ஆம் திகதி வரை இந்த இயந்திரங்களைப் பழுதுபார்க்க முடியவில்லை. ரூபா 52,540,888 செலவில் கொள்வனவு செய்யப்பட்டு, அவற்றின் பயனுள்ள ஆயுட்காலம் முடிவடையாத இந்த 06 இயந்திரங்களுக்கும் பழுது பார்த்தல் மற்றும் சேவை வழங்குவது தொடர்பான ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப் படவில்லை. இதன் காரணமாக, இயந்திரங்களைப் பயன் படுத்தாமல் செயலிழக்கச் செய்ய வேண்டியிருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு லேசர் குறியிடும் இயந்திரங்களின் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி, உற்பத்தி நிறுவனம் இரண்டு அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயிற்சியை வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட போதிலும், நான்கு வருடங்கள் கடந்தும் அதிகாரிகளுக்கான அந்தப் பயிற்சி பெறப்படவில்லை. மாறாக, அந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான பற்றுச்சீட்டில் சேர்க்கப்பட்டிருந்த ரூபா 900,000 ஆன அதிகாரிகளுக்கான பயிற்சிச் செலவு 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி மீள அறவிடப்பட்டிருந்தது.

ஆண்டின் இறுதியில் செயலிழந்தன. 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு இயந்திரங்களில், 2024 பெப்ரவரி மற்றும் 2024 மார்ச் மாதங்களில் சில குறைபாடுகள் ஏற்பட்டு லேசர் கதிர்களை உருவாக்கம் செயலிழந்தது. இந்தச் சந்தர்ப்பங்களில், உள்ளூர் முகவர் நிறுவனம் நிகழ்நிலை மூலம் தாய் நிறுவனத்தைத் தொடர்புகொண்டு பலமுறை பழுதுபார்க்க முயன்ற போதிலும் அது தோல்வியடைந்தது.

இந்த இயந்திரங்களைப் பழுதுபார்ப்பது அதிக செலவுடையதாக இருப்பதால், குறைவான செலவில் சீனா அல்லது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 03 புதிய லேசர் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, கொள்வனவு நடவடிக்கை கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

2024 மார்ச் 15 ஆம் திகதி முதல் இந்த முத்திரையிடும் சேவை இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் தொடர்ச்சி யாக (Hand Marking) நடைபெற்று வருகிறது.

(உ) அதிகாரசபையால் சர்வதேச இரத்தினக்கல் வர்த்தக மையத்தை நிறுவுவதற்காக அதிகாரத்தால் நிர்மாணிக்கப்பட்ட இரத்தினக் கல் கோபுரக் கட்டிடத்தில், 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்ட 27 கடைகளில் 14 கடைகள் மாத்திரமே குத்தகைக்கு வழங்கப் பட்டிருந்தன. எஞ்சிய 13 கடைகளும் உணவகமும் ஒரு வருட காலமாக குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வந்தன. குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 05 கடைகள்

இரத்தினக்கல் கோபுரத்தில் உள்ள உணவகத்திற்காக மூன்று சந்தர்ப்பங்களில் விலை கோரப்பட்ட போதிலும், எந்தவொரு கொள்வன வாளரும் முன்வரவில்லை. பணிப்பாளர் சபையின் ஒப்புதலின் பேரில், வெளிநாட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 10 கடை களையும் உள்நாட்டில் விற்பனை செய்வதற்கு, 2025 மே 07 ஆம் திகதி 13 கடைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட போதிலும், அவற்றில் ஒரு

வணிக நோக்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கடைகளை திட்டமிட்டபடி உரிய வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் குத்தகைக்கு வழங்கி, கடைகள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மொத்தமாக ரூபா 2,179,890 வாடகைத் தொகை நிலுவையில் இருந்தது. இதன் காரணமாக, ஒரு கடை மீண்டும் அதிகாரசபை வசமாக்கப்பட்டதுடன், 04 கடைகள் முத்திரையிடப்பட இருந்தன. குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 04 கடைகள் ஏலவிற்பனை செய்யப்படுகையில் பணம் செலுத்தி ஒதுக்கீடு செய்யப்பட்டதை அடுத்து, ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு ஏறத்தாழ 08 மாதங்கள் அளவிலான காலம் கடந்திருந்த காரணத்தினால் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் ஈட்டியிருக்கக்கூடிய ரூபா 1,250,000 வருமானம் அதிகாரசபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | கடை மட்டுமே விற்பனை செய்யப்பட்டிருந்தது. கடை இலக்கம் 02 ஐ மீண்டும் கேள்வி கோரப்படுவதற்கும், கடை இலக்கம் 02 இன் நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கும், கடை இலக்கம் 04, 09, 13, 21 ஆகியவற்றுக்கு ஒப்பந்தத்தின் படி முத்திரையிட்டு நிலுவைத் தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவும் பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்பந்தத்தின் படி குத்தகைக் கட்டணத்தைச் செலுத்தாத கடைகள் தொடர்பில் நிலுவையில் உள்ள வாடகையை மீளப் பெறுவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஊ) | இரத்தினக்கல் நிறைந்த பகுதிகளில் அங்கீகாரமற்ற இரத்தினக்கல் அகழ்வைத் தடுப்பதற்கு பொருத்தமான ஒரு வழிமுறையை உருவாக்கி சட்டப்பூர்வமாக இரத்தினக் கல்லை அகற்றுவதற்கும் கும்பக்கன் ஓயா அணைக் கட்டுக்கு அடியில் உள்ள காணியில் ஒரு ஆய்வுக்கான மாதிரிச் சுரங்கத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அதிகார சபையால் ரூபா 5,757,000 மதிப்பீட்டைத் தயாரித்து, 2021 ஆம் ஆண்டில் ரூபா 750,000 செலவிடப்பட்டிருந்தது. இதில் சுமார் 600 கரட் இரத்தினக் கற்கள் கண்டெடுக்கப்பட்டன. இருப்பினும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காமையால், மேலதிக நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டிருந்தன. அதிகாரத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு களின் தரவுகளின் படி, ஏறத்தாழ ரூபா 10 பில்லியன் மதிப்புள்ள இரத்தினக்கற்கள் இருக்க வாய்ப்புள்ள நிலையில், செயற்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு அதிகாரசபையால் | மொனராகலை கும்பக்கன் ஓயா திட்டமிடப்பட்ட அணைக்கட்டுச் செயற்திட்டத்திற்காக நீரில் மூழ்கவிருக்கும் நிலப்பரப்பு, உரிமம் பெற்ற சுரங்கங்கள் இயங்கி வந்த பகுதியாகும். மேலும், அங்கீகாரமற்ற இரத்தினக்கல் அகழ்வு, குறிப்பாக கும்பக்கன் ஓயா பகுதியில், அதிகமாக உள்ள ஒரு பகுதியாகும். இரத்தினக்கல் வளத்தைக் கொண்ட பகுதிகள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன. குறைந்த பாதிப்பின் கீழ் அகழ்ந்து இரத்தினக்கற்களை அகற்றக்கூடிய இரண்டாம் நிலை இரத்தினக்கல் படிமங்கள் (Secondary Gem Deposits) உள்ள இடங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இருப்பினும், நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து ஒப்புதல் கிடைக்காமையால், இந்த வளங்களை அகற்றுவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் | அமைச்சரவை மட்டத்தில் கலந்துரையாடி, சட்டப்பூர்வமாக இரத்தினக்கல் அகற்றுவதற்குப் பொருத்தமான ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2024 ஏப்ரல் 19 ஆம் திகதி மீண்டும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கோரப் பட்டிருந்த போதிலும் அதற்கு இதுவரை பதில் கிடைக்கப்பெற்றிராததுடன் இது வரையிலும் அந்த காணியில் அங்கீகாரமற்ற அகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. | தடைப்பட்டுள்ளன. | |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினக்கல் உரிமங்களை வழங்கும் போது, சுரங்க அகழ்வின் பின் மீண்டும் நிரப்பி புனரமைப்பதற்காக ரூபா 4,500 வும் ரூபா 9,000 வும் இயந்திர மயமாக்கப்பட்ட சுரங்கங்களுக்கு 3,000 -40,000 சதுர அடிகளுக்கு ரூபா 600,000 முதல் ரூபா 5,000,000 ஆக விசேட பாதுகாப்பு வைப்புப் பிணைத் தொகையாக, சுரங்க உரிமையாளர்களிடம் இருந்து அறவிடப்படுவதுடன் குறித்த சுரங்கங்கள் புனரமைக்கப்பட்ட பின்னர் இந்த பிணை வைப்புத் தொகை அவர்களுக்குத் திருப்பி வழங்கப்படுகிறது. சுரங்க வைப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இவ்விதத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,760,351,594 நிலவியதுடன் இந்த வைப்புத் தொடர்பான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமைல், அதன் துல்லியத்தன்மை உறுதிப்படுத்த முடியவில்லை. | பிராந்திய அலுவலகங்களில் உள்ள வைப்புத் தொகைப் பதிவேட்டு ஆய்வின் மூலம் ரூபா 1,760,351,594 சுரங்க வைப்புத் தொகைகளுக்கான மீதியை உறுதிப்படுத்த முடியும். வேலை முடிவடைந்த சுரங்கங்கள் தொடர்பான வைப்புத் தொகைகள், குறித்த சுரங்கக் குழிகள் நிரப்பப்பட்டதன் பின்னரே விடுவிக்கப்படுவதால், இம் மீதிகளில், தற்போது செயல்பாட்டில் உள்ள சுரங்கங்கள் தொடர்பான பிணை வைப்பு மீதிகளே உள்ளன. | பிணை வைப்புத் தொகைகளைப் பயன்படுத்தி இரத்தினக்கல் சுரங்கக் குழிகளை நிரப்பி, சம்பந்தப்பட்ட காணியை முறையாகப் புனரமைப்பதற்காக ஒரு முறையான பொறிமுறையை நிறுவ வேண்டும். |
| (ஆ) | இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையிடம் இருந்து சுரங்க அகழ்வு உரிமத்தை எளிதாகப் பெற முடிவதால், நீண்ட காலமாக மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்கள், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திடம் மணல் அகழ்வு உரிமத்திற்கு விண்ணப்பிக்காது, இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் சுரங்க அகழ்வு உரிமத்தைப் பயன்படுத்தி மணல் அகழ்ந்து, அந்த மணலை | இரத்தினக்கல் தொழிலை மேற்கொள்ளும் போது துணை விளைபொருளாக உருவாகும் மணல், சுரங்கங்களை மூடுவதற்குத் தடையாக இல்லாதவாறு சட்டப்பூர்வமாக அகற்றுவது தொடர்பாக இருந்த சிக்கல்களைத் தீர்க்க, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் மற்றும் எமது அதிகாரசபையும் கலந்துரையாடி, தற்போது சம்பந்தப்பட்ட விதிமுறைகளை | சட்டப்பூர்வமாக விதிமுறைகளை உருவாக்கி, உரிமத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்தல் மற்றும் மணலை அகற்றும் நடவடிக்கைகளைச் சட்டப்பூர்வமான முறையில் வழிநடத்துவதற்கும் |

| | | |
|---|---|---|
| அகற்றுவதற்குத் தேவையான போக்குவரத்து உரிமத்தை மாத்திரம் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் கோருவது ஆவணங்களைச் சரிபார்க்கும் போது அவதானிக்கப்பட்டது. மாதிரி ஆய்வின் போது, உரிமம் இலக்கம் GML1020817 உடைய சுரங்க உரிமையாளரால் 2024 ஜுலை 31 ஆம் திகதியில் உள்ளவாறு, சுரங்க அகழ்வு மற்றும் தாதுக்களைக் கழுவுதலின் விளைபொருளாக ஏறத்தாழ 2,500 கியூப் மணலைக் குவித்துள்ளமையால் அந்த மணலை அகற்றுவதற்கு அதிகாரத்தின் அனுமதியைக் கோரியிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2025 ஜனவரி 10 ஆம் திகதி வரை இதற்காக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனுமதி கிடைத்திருக்கவில்லை. | உருவாக்கி, இருந்த சிக்கல்களைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பொறுப்பேற்க வேண்டும். |

**3.3 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபை அதிகாரிகளின் நலனுக்காக கதிர்காமம் பிரதேசத்தில் ஒரு விடுமுறைக் கால ஓய்வு விடுதியைக் நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,444,580 செலவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட 39.84 பேர்ச் காணி, உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் படாமல் 09 ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்றுக் காணப்பட்டது. இந்த காணி அத்தமீறிய குடியிருப்பாளர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளது என்பது இரு தரப்பினருக்கும் தெரிந்திருந்தும், காணியைக் கொள்வனவு செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அத்தமீறிய குடியிருப்பாளர்களை அகற்று வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி களால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் படி, அத்தமீறிய குடியிருப்பாளர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கோரப்பட்ட ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணியை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றியதன் பின்னர் நடவடிக்கை எடுக்காத இதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட காணி நோக்கத்திற்குரிய பணிக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 889,000 செலவிலான பெலிதெனிய காணி மற்றும் ரூபா 5,358,507 செலவிலான கட்டிடம் 12 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்று சேதமுற்று காணப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் பெலிதெனிய கட்டிடத்தை புனரமைப்பதற்கு ரூபா 3,147,501 செலவிடப்பட்ட போதிலும், செலவு செய்யப்பட்ட ஆண்டி லிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிட்டிய 194 மாதங்களில் ஏறத்தாழ 20 மாதங்கள் மட்டுமே ஏதோ ஒரு பணிக்காக பயன்படுத்தப் பட்டிருந்தது. எனினும், ஏறத்தாழ 170 மாதங்கள் கட்டிடம் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப் படாதிருந்ததுடன் புனரமைப் பிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவாகியிருந்தது. | இந்த கட்டிடம் இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தால் ஆபரண உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆபரண உற்பத்தி அதிகாரசபையின் பணி அல்ல என்பதால், இந்த நிலையம் பயன்பாடற்றுக் காணப்பட்டது. அது மேலும் பயனடையாது இருப்பதைத் தடுக்கும் நோக்குடன், இந்த கட்டிடமும் காணியும் திக்வெல்ல பிரதேச செயலாளரிடம் மீண்டும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | பயனற்ற செலவுகள் ஏற்படாதவாறு, காணியை உற்பத்தித் திறனுள்ள பணிக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கையில் ஒரு முழுமையான இரத்தினக்கல் ஆய்வகத்தை நிறுவும் நோக்கத்துடன், இரத்தினக்கல் ஏற்றுமதி மதிப்பின் மீது அதிகாரசபை அறவிடும் 0.25% ஏற்றுமதி சேவை கட்டணத்துடன் மேலதிகமாக, 2001 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மேலும் 0.25% ஏற்றுமதி சேவை கட்டணம் ஏற்றுமதியாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டு அதிகாரசபைக்கும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கையின் பேரில், இலங்கை ஜெமொலொஜிகல் லபோரட்டரி என்ற பெயரில் ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 2008 மே 29 ஆம் திகதி நிறுவப்பட்டது. 2009 ஜனவரி 28 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் படி, மேலே குறிப்பிடப்பட்டவாறு சேகரிக்கப்பட்ட ஆய்வக மேம்பாட்டு நிதியில் சேகரிக்கப் பட்ட ரூபா 92,498,578 தொகை | இந்த நிறுவனம் கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு தனியார் நிறுவனமாக இருப்பதால், அதன் பணிப்பாளர்களாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் அதிகாரிகள் அவர்களின் உத்தியோகபூர்வ மட்டத்தில் செயல்படுவதற்கு 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் வழங்கப்படாதமையால், இந்த நிறுவனம் செயல்படவில்லை. இதனால் முதலீடு செய்யப்பட்ட நிதி குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதியை அதிகாரசபை வசமாக்கி, தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகார சபை சட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்தை சர்வதேச தரத்திலான ஆய்வகங்களில் ஒன்றாக மாற்றுவதற்காக 2016 ஆகஸ்ட் 24 ஆம் திகதி அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, | நிறுவனத்தைச் சட்டப்பூர்வமாகப் பராமரிப்பதன் மூலம் இரத்தினக்கல் ஆய்வகத்தை நிறுவுவதன் மூலம் நிறுவனத்தின் கணக்குகளில் உள்ள நிதியை உற்பத்தித் திறனுடன் பயன்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை விரைவாகத் தயாரிப்பதற்கு அல்லது நிறுவனத்தைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2009 ஏப்ரல் 27 ஆம் திகதி மேற்குறித்த நிறுவனத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. நிறுவனம் நிறுவப்பட்டு 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிறுவனத்தின் நோக்கமாக இருந்த ஆய்வகத்தை நிறுவ முடிந்திருக்கவில்லை.<br>நிறுவனத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 92,498,578 தொகையும் அதனுடன் தொடர்புடைய வட்டியும் அதிகாரசபை நிதிக்கு மீண்டும் மாற்றுவதற்கும், அந்த நிதியைப் பயன்படுத்தி, முன்மொழியப்பட்ட சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப இரத்தினவியல் ஆய்வகத்தை அதிகாரசபையின் கீழ் நிறுவுவதற்கும் 2016 ஆகஸ்ட் 24 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் 08 வருடங்கள் கடந்தும் அமைச்சரவை தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. 2014/2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை வங்கியால் உறுதிப்படுத்தப்பட்டவாறு நிறுவனத்தின் நிலையான வைப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 251,134,797 மீதி நிலவியதுடன் நடைமுறைக் கணக்கில் ரூபா 25,841,283 மீதி விளைவற்றுக் காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட நிதியை அதிகாரத்தின் வசமாக்குவதற் காக இந்த நிறுவனம் கலைக்கப்பட வேண்டும். அதற்கான சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரை 2024 ஏப்ரல் 22 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் E/142/23/NG & JA இன் கீழ் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரை மூலம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 325 முதல் 332 வரையிலான பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, பணிப்பாளர்களை நியமிக்காமல் பங்குதாரர்களின் தன்னிச்சையான கலைப்பு குறித்து பரிசீலிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>அதன்படி, இந்த நிறுவனத்தைக் கலைப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரின் தலைமையில், 2025 ஏப்ரல் 07 ஆம் திகதி இலங்கை இரத்தினக்கல் சங்கம் மற்றும் அதிகாரசபையின் அதிகாரிகள் பங்கேற்ற ஒரு கூட்டம் நடைபெற்றதுடன் அதில் நிறுவனத்தைக் கலைப்பதுடன், மாற்றங்களுடன் ஒரு புதிய நிறுவனத்தை நிறுவவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது நிறுவனத்தின் நடவடிக்கைகள் செயல்பாட்டு மட்டத்தில் இன்மையால், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | அதிகாரசபை ஆரம்பித்திருந்த 02 இரத்தினக்கல் அகழ்வுத் திட்டங்கள் மீளாய்வாண்டில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் அந்தத் திட்டங்களுக்காக ரூ.1,795,172 செலவிடப்பட்டிருந்தது. | களுகங்கை ஹெரணியாவக திட்டத்தை மேலும் செயல்படுத்துவது குறித்து தெளிவான சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்காதமையால், 2025 மே மாதம் இத் திட்டப் பகுதியிலிருந்து வெளியேற மீண்டும் பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. | ஒரு ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக இரத்தினக்கல் அகழ்வை மேற்கொள்ளலாகாது. விளைவற்ற செலவுகள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எதிர்காலத்தில் அனுமதியற்ற இரத்தினக்கல் அகழ்வை சுற்றிவளைப்புகளின் மூலம் கட்டுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட ஆற்றுப் பகுதியை பிரசித்த ஏலத்தின் மூலம் அகற்றுவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையால் ரூபா 19 மில்லியன் செலவில் ஒரு மென்பொருள் அமைப்பை நிறுவுவதற்கு 2016 ஆம் ஆண்டில் ஒரு மென்பொருள் வழங்குனருடன் 11 மாத காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2024 ஆம் ஆண்டு வரையில் ரூபா 10,925,000 செலுத்தப் பட்டிருந்தது. இருப்பினும், பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 08 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மென்பொருள் அமைப்பை நிறுவுவது வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விவரக்குறிப்புகளுக்குரிய முழுமையான பகுதிகளை மேம்படுத்த மென்பொருள் மேம்பாட்டு நிறுவனம் தவறியிருந்தது. மேலும், மேம்படுத்தப்படாத பகுதிகளை மேம்படுத்த அந்த நிறுவனத்திற்கு 09 மாத கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும், அந்த காலப்பகுதியில் விவரக்குறிப்புகளுக்கு இணங்க கணினி அமைப்பு மேம்படுத்தப்படாதமையால், 2025 பெப்ரவரி 06 ஆம் திகதி பெறப்பட்ட பணிப்பாளர் சபை ஒப்புதலின் பேரில், மென்பொருள் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் தெரிவித்து ஒப்பந்தத்திலிருந்து விலக நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த மென்பொருள் அமைப்பைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு புதிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக 2025 மார்ச் 25 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | பெறுகை பணிகளை முறைப்படி மேற்கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்துடன் தாமதமின்றிச் செயல்பட்டு, மென்பொருள் அமைப்பை மேம்படுத்தி முடிப்பதற்கு பொறுப்பேற்க வேண்டும். |